செய்தி வெளியீடு எண்:909 நாள்:20.10.2021

செய்தி வெளியீடு

தமிழ் வளர்ச்சித் துறைக்கான 2021–2022ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பிற்கிணங்க "நாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர் **அண்ணல் காந்தியடிகள் அவர்களின் பிறந்த நாளான அக்டோபர் 2**ஆம் நாள் கல்லூரி, பள்ளி மாணவர்களுக்குத் தனித்தனியே பேச்சுப் போட்டிகள் நடத்தப்பெற்றன. சென்னையில் கல்லூரி, பள்ளிப் போட்டிகள் வடசென்னை, தென்சென்னை, மத்திய சென்னை ஆகிய மூன்று இடங்களில் நடத்தப்பெற்றன.

பேச்சுப்போட்டியில் வெற்றி பெற்ற கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களுக்கு முதல் பரிசாக ரூ.5000/–, இரண்டாம் பரிசாக ரூ.3000/–, மூன்றாம் பரிசாக ரூ.2000/– மற்றும் அரசுப்பள்ளி மாணவர்களுக்கு சிறப்புப் பரிசாக ரூ.2000/– வீதம் இரண்டு மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

## பள்ளி, கல்லூரி போட்டியில் வெற்றிபெற்றவர்கள் விவரம் பின்வருமாறு

**பள்ளி மாணவர்களுக்கு சென்னை மாவட்டம் – வடசென்னையில்** நடைபெற்ற பேச்சுப்போட்டியில் மாதவரம், சென்னை மகளிர் மேல்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பு பயிலும் மாணவி சி.விவேகா முதல் பரிசையும், பெரம்பூர், லூர்து மகளிர் மேல்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பு பயிலும் மாணவி ந. ஸ்ரீநிதி இரண்டாம் பரிசையும், சூளை, ஸ்ரீமுத்துக்குமாரசுவாமி தேவஸ்தான வேணுகோபால் செட்டி மேல்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பு பயிலும் மாணவன் ஜெ.ராகுல் மூன்றாம் பரிசையும், **மேலும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கான சிறப்புப் பரிசினை** மாதவரம், சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 9ஆம் வகுப்பு பயிலும் மாணவி க.காயத்ரியும், கல்யாணபுரம், சென்னை மேல்நிலைப்பள்ளியில் 9ஆம் வகுப்பு பயிலும் மாணவி செ. கௌரி கீர்த்தனாவும் பெற்றுள்ளனர்.

**மேலும் சென்னை மாவட்டம் – தென்சென்னையில்** நடைபெற்ற பள்ளி மாணவர்களுக்கான பேச்சுப்போட்டியில் பழைய வண்ணாரப்பேட்டை, கே. ஆறுமுக நாடார் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பு பயிலும் மாணவி ஏ.லாவண்யா முதல் பரிசையும், இராயபுரம் புனித பீட்டர்

மேல்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பு பயிலும் மாணவன் ஏ.முகமது அர்ஷத்சுகேல் இரண்டாம் பரிசையும், கோயம்பேடு சென்னை மேல்நிலைப்பள்ளியில் 9ஆம் வகுப்பு பயிலும் மாணவி டி. மனோதா மூன்றாம் பரிசையும், **மேலும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கான சிறப்புப் பரிசுகளை** கோடம்பாக்கம் பி.சி.கே.ஜி மேல்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பு பயிலும் மாணவன் . வி. சின்னதுரைக்கும் எம்.ஜி.ஆர் நகர், அரசு மேல்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பு பயிலும் மாணவி எஸ்.இராகவியும் பெற்றுள்ளனர்.

**மேலும் சென்னை மாவட்டம் – மத்தியசென்னையில் நடைபெற்ற** பள்ளி மாணவர்களுக்கான பேச்சுப்போட்டியில் ஐசிஎப் காலனி, ஐசிஎப் மேல்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பு பயிலும் மாணவன் க. பாலகிருஷ்ணன் முதல் பரிசையும், மயிலாப்பூர், லேடி சிவசாமி பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பு பயிலும் மாணவி க.லாவண்யா இரண்டாம் பரிசையும், ஜெயகோபால் கரோடியா பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பு பயிலும் மாணவி ம. துர்காதேவி மூன்றாம் பரிசையும், **மேலும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கான சிறப்புப் பரிசுகளை** செனாய் நகர், சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பு பயிலும் மாணவி செல்வி கா.நந்திதாகாந்தியும். குயப்பேட்டை, சென்னை உயர்நிலைப்பள்ளி மாணவி செல்வி பா. அபிநயாவும் பெற்றுள்ளனர்.

**கல்லூரி மாணவர்களுக்கு சென்னை மாவட்டம் – வடசென்னையில்** நடைபெற்ற பேச்சுப்போட்டியில் வேப்பேரி, குருஸ்ரீ சாந்தி விஜய் ஜெயின் மகளிர் கல்லூரியில் பி.காம், மூன்றாம் ஆண்டு பயிலும் மாணவி பொ. காவியா முதல் பரிசையும், மீஞ்சூர், ஸ்ரீசந்திர பிரபு ஜெயின் கல்லூரியில் பி.பி.ஏ., மூன்றாம் ஆண்டு பயிலும் மாணவி க. கீர்த்தனா இரண்டாம் பரிசையும், வியாசர்பாடி, டாக்டர் அம்பேத்கர் அரசு கலைக் கல்லூரியில் பி.ஏ., இரண்டாம் ஆண்டு பயிலும் மாணவி ந. தேவி மூன்றாம் பரிசையும் பெற்றுள்ளனர்.

**மேலும் சென்னை மாவட்டம் – தென்சென்னையில்** நடைபெற்ற கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப்போட்டியில் தரமணியிலுள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் முதுகலைத் தமிழ் இரண்டாமாண்டு பயிலும் மாணவன் நா. அருண் முதல் பரிசையும், கேளம்பாக்கம், இந்துஸ்தான் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இளமறிவியல் உளவியல் இரண்டாமாண்டு பயிலும் மாணவி ச. தேன்மொழி இரண்டாம் பரிசையும், துரைப்பாக்கம், தன்ராஜ் பெயத் ஜெயின் கல்லூரியில் இளங்கலை வணிகவியல் பிகாம், மூன்றாமாண்டு பயிலும் மாணவி கா. சுவாதி மூன்றாம் பரிசையும் பெற்றுள்ளனர்.

**மேலும் சென்னை மாவட்டம் – மத்தியசென்னையில்** நடைபெற்ற கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப்போட்டியில் லயோலா கல்லூரியில் முதுகலை சமூகப்பணி, இரண்டாமாண்டு பயிலும் மாணவி ம. அனுஷா முதல் பரிசையும், மாநிலக் கல்லூரி, இளங்கலை புள்ளியியல், இரண்டாமாண்டு பயிலும் மாணவி உ.கிருத்திகாதேவி இரண்டாம் பரிசையும், விலிங்டன் சீமாட்டி கல்வியியல் மேம்பாட்டு நிறுவனம் இளங்கலை கல்வியியல், முதலாமாண்டு பயிலும் மாணவி ரா.சுதா மூன்றாம் பரிசையும் பெற்றுள்ளனர். வெற்றிபெற்ற பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

**********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9